


கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், சேலம் மேற்கு மற்றும் வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.11.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு புதிய உயர்கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ், மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, டாக்டர் மா. மதிவேந்தன் மற்றும் மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சிங்கம்புணரி அருகே

# 30 கிராம மக்களின் கோரிக்கையை நிறைவேற்றியவர் எஸ்.எஸ்.தென்னரசு!

சிவகங்கை, நவ. 16-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி சிங்கம்புணரி தாலுகாவில் கிருங்கா கோட்டை கிராமம் உள்ளது. இதைச் சுற்றி மேலப்பட்டி, வேங்கைபட்டி, பிரான்மலை, வையாபுரிப்பட்டி, ஆகிய தலை கிராமங்களும் அதனைச் சுற்றி 30 சிறிய கிராமங்களும் உள்ளது இந்த ஐந்து ஊராட்சிகளில் நீண்ட நாட்களாக விவசாயம் மற்றும் குடி நீருக்காக 36 ஆண்டுகளுக்கு முன்பாக அப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்பட்டு வந்துள்ளார்கள்.

1989இல் திருப்பத்தூர் தொகுதியில் சட்டமன்ற வேட்பாளரான முன்னாள் கழக அமைப்புச் செயலாளர் எஸ்.எஸ். தென்னரசு கிருங்கா கோட்டை பகுதியில் வாக்குசேகரிக்க சென்ற பொழுது கிருங்கா கோட்டை மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராம மக்கள் தங்களது பகுதிக்கு விவசாய ம் மற்றும் குடிநீருக்காக சிரமப்படுவதாகவும் அதை தீர்த்து வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அவர்களிடம் வேட்பாளர் எஸ்.எஸ். தென்னரசு சட்டமன்ற உறுப்பினராக வந்ததும் இந்த கோரிக்கையை தீர்த்து வைப்பதாக கிராம மக்களிடம் உறுதி கூறினார்.

அதனைத்தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட எஸ்.எஸ்.தென்னரசு இது குறித்து கிருங்கா கோட்டை மற்றும் அதை சுற்றியுள்ள கிராம மக்களின் கோரிக்கையை நன்றாக பரிசீலித்து பள்ளப்பட்டி அருகே ராஜ கால்வாயில் வரும் தண்ணீரை இப்பகுதிக்கு நிரந்தர மாக் கொண்டு வருவதற்கு கிருங்கா கோட்டையில் அப்போதைய மதிப்பீட்டில் ரூபாய் 1.50 லட்சம் செலவில் ஷட்டருடன் கூடிய தடுப்பணையை அமைத்து கொடுத்தார் .இதனால் நத்தம் ஒன்றியம் கரந்தமலையிலிருந்து வரும் மழை தண்ணீர் திருப்பத்தூர் பெரிய கண்மாய்க்கு வந்து அங்கிருந்து இன்று வரை கிருங்காகோட்டைக்கு வந்து கொண்டிருக்கின்றது. இதனால் இப்பகுதியை சுற்றி சுமார் 3ஆயிரம் ஏக்கர் விவசாயநிலங்கள் பயன்பெற்றுவருகிறது. குடிநீர் ஆதாரங்கள் அதிகரித்தது.

எனவே தங்களது நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிய சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.தென்னரசுவிற்கு கிருங்கா கோட்டை கிராம மக்கள் எஸ்.எஸ்.தென்னரசுவை கௌரவபடுத்தும் வகையில் கருங்கல்லிலான சிலையை அமைத்திருந்தார்கள். இந்த நிலையில் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பனிடம் இந்த கருங்கல்சிலையை மாற்றிதருமாறு கோரினார்கள். அதை ஏற்றுக்கொண்ட மாவட்டக் கழகச் செயலர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தனது சொந்த செலவில் கல் சிலைக்கு பதிலாக மார்பளவு வெண்கல சிலையை தற்பொழுது அமைத்து கொடுத்துள்ளார்.

இந்த சிலை அமைப்பு ஏற்பாட்டினை சிங்கம்புணரி ஒன்றிய செயலாளர் பூமிநாதன் என்ற பூமணி, ஒன்றிய துணை செயலாளர் சிவபுரிசேகர், எஸ்.எஸ்.தென்னரசு சகோதரர் மகன் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ.வல்லபாய் மற்றும் கிருங்கா கோட்டை அதனைச் சுற்றியுள்ள கிராம மக்கள் உதவியுடன் எஸ்.எஸ் தென்னரசு சிலை அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று தற்போது சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு வெண்கல சிலையை நேற்று 15ம்தேதி கழக இளைஞரணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். கிருங்கா கோட்டைக்கு வருகை தந்த துணை முதலமைச்சர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் ஆகியோருக்கு கிராம மக்கள் சார்பில் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

### நெல்லை கிழக்கு மாவட்ட

# இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் ம. கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது!

நெல்லை, நவ.16-

திராவிட மாடல் முதலமைச்சர், கழகத்தலைவர் அன்புத்தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க கழக துணை பொதுச் செயலாளர், கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்களின் வழிகாட்டுதலின்படி

நெல்லை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் ஆலோசனை கூட்டம் வள்ளியூர் நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் இந்திய தேர்தல் ஆணையம் கொண்டு வந்துள்ள

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) குறித்தும்,கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் நிகழ்வை சிறப்பாக கொண்டாடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

நிகழ்வில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜான்ரபீந்தர்,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கள் தில்லை ராஜா,அருள்ராஜ் டார்வின்,மனோஜ்குமார் மற்றும் ஒன்றிய ,நகர,பேரூர்,இளைஞரணி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### வாக்குத் திருட்டு குற்றத்திற்காக

# தலைமைத் தேர்தல் ஆணையரை கைது செய்வார்களா?

## முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமின் உதவியாளர் பொன்ராஜ் கேள்வி!




**சென்னை, நவ.16-**

**“வாக்குத் திருட்டுக் குற்றத்திற்காக தலைமைத் தேர்தல் ஆணையாளர் ஞானேஷ் குமாரை கைது செய்வார்களா?” என்று முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்களின் உதவியாளர் பொன்ராஜ் கேள்வி எழுப்பியுள்ளார்.**

சமூக வலைதளங்களில் முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் அவர்களின் உதவியாளர் பொன்ராஜ் அவர்கள் அளித்த பேட்டி வைரலாகி வருகிறது. அந்த சமூக வலைதளங்களில் வைரலாகி வரும் பொன்ராஜ் அவர்களின் பேட்டி வருமாறு:

ஞானேஷ்குமார் என்று ஒருத்தர் இருக்கிறார். எலக்ஷன் கமிஷ்னர். படித்துதானே வந்திருக்கிறார். எலக்ஷன் கமிஷனராக உட்கார்ந்து இருக்கிறார். ஐ.ஏ.எஸ்.படிப்பை கிளியர் செய்து விட்டு தானே வந்திருக்கிறார். அவர் செய்து கொண்டிருக்கின்ற அயோக்கி யத்தனத்தை நீங்கள் பட்டியல் இட முடியுமா?

அந்த அயோக்கியத்தனத்திற்கு யாராவது பதில் சொல்றாங்களா இங்கே? படித்தவர் தானே அவர். டாக்டர் படித்து இருக்கிறார். அவன் குண்டு வெடிக்கிறான், ஓ.கே. தீவிரவாத செயல்களில் ஈடுபடுகிறான். அவனுக்கு மதம் காரணமாக இருக்கிறது, அவனை அரஸ்ட் செய்துவிடுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்,

**ஞானேஷ்குமாரை எப்போது அரஸ்ட் செய்வீங்க.? ஒட்டு மொத்த இந்தியாவின் வாக்கை திருடுகிறார். அவரை எப்படிங்க அரஸ்ட் செய்வீங்க.? 65 இலட்சம் பேர்களுடைய வாக்கை திருடி இருக்கிறார். ஞஜகசு ஐக் கொண்டு, தமிழ்நாட்டில் இப்போது வாக்கை திருடப் போகிறார். எப்படி அரஸ்ட் செய்வீங்க. ஐ.ஏ.எஸ்.ஆக இருக்கிறார். எலக்ஷன் கமிஷனரா இருக்கார். படித்து இருக்கிறார். பி.ஜே.பிக்கு அடிமையா இருகார்? ஒ படித்தவன் எப்படி பி.ஜே.பிக்கு அடிமையாக இருப்பார். இன்டிபெண்டன்ட் எலக்ஷன் கமிஷனில் படித்தவர், ஐ.ஏ.எஸ்.முடித்தவர், இன்றைக்கு ஒரு அடிமை சேவகம் செய்கிறார் என்றால், அவருக்கும் படிப்புக்கும் என்ன சம்பந்தம்?**

ஈக்குவள் செய்து பார்ப்போமா. இதனை ஈக்குவள் செய்ய தெரிந்த நாராயண திருப்பதிக்கு எலக்ஷன் கமிஷனை ஈக்குவள் செய்ய தெரியாதா?

**நெறியாளர்:** ஒட்டும் தீவிரவாதமும் ஒன்றா என்று கேட்கிறார்களே?

**பொன்ராஜ்:** ஆமாம் ஒன்று தான். மக்களின் அடிப்படை உரிமையான ஓட்டைத் திருடி நாட்டை கைப்பற்றுவது என்பது என்னது? தீவிரவாதம் தானே! தீவிர வாதத்தைவிட கொடுமையான செயல் அது. இது எலக்ஷன் தீவிரவாதம், அரசியல் தீவிர வாதம். அந்த அரசியல் தீவிர வாதத்திற்கு இன்டிபெண்டன்டா செயல்படக் கூடிய எலக்ஷன் கமிஷனர் ஒரு அடிமையாக செயல்படுகிறார் என்றால் எப்படி அதனை ஏத்துக் கொள்வீர்கள். என்ன பதில் சொல்கிறார். சுப்ரீம் கோர்ட்டிற்கு பதில் சொல்கிறாரா? என்ற கேள்விக்காவது பதில் இருக்கிறதா? ஜனநாயக முறைப்படி எழுப்பக் கூடிய எந்தக் கேள்விக்காவது பதில் இருக்கிறதா? சொல்லுங்கள்!

இது தீவிரவாதத்தை விட அதி தீவிரவாதம்.

அவர் படிச்சு இருந்து என்ன பிரயோசனம். படிச்சவருக்கு அறிவு இருக்கனும், காமன்சென்ஸ் இருக்க வேண்டும். பதவிக்கு ஏற்ற வகையில் செயல்படக் கூடிய தைரியம் இருக்க வேண்டும். உனக்கு அரசியல் சாசனம் இன்டிபெண்டட் உரிமை கொடுத்து இருக்கு. அதனையும் மீறி நீங்கள் அடிமையாக இருக்கிறீர்கள் என்றால், நீ என்ன பதவிக்காக அடிமையாக இருக்கிறாயா? உன் குடும்பத்தில் உள்ள அத்தனை பேரும் ஐ.ஏ.எஸ்.ஆபிசர்ஸ். படித்தவர் அடிமையாக இருக்கிறான் என்றால் நீ படிச்சு என்ன பிரயோஷனம் ?

கேட்பேனா இல்லையா இப்போ. படிப்புக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது.?

குவாலிட்டி, கேரக்டர், தைரியம், வீரம், விவேகம், அரசியல் சாசன சட்ட பதவிக்கேற்ற செயல்படக் கூடிய நீதி வழுவா தன்மை. இவையெல்லாம் ஒருத்தனுக்கு இருக்கனும் என்று நினைத்தால் அவன் முது கெலும்புள்ள ஒரு மனிதனாக இருப்பான். முதுகெலும்பற்ற வெற்று பிண்டங்களை வைத்துக் கொண்டு அவர்கள் ஆட்சி நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் அவர்களிடம் என்ன பேசுவது?

இவ்வாறு பொன்ராஜ் அவர்கள் பேசினார்.






மதுரையில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் முதல் மாவட்ட விளையாட்டு அரங்கம் வரை 14ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை போட்டிக்கான வெற்றிக் கோப்பை சுற்றுப்பயணத்தை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், மீனாட்சி அம்மன் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன்,மாநகர காவல் ஆணையாளர் ஜெ.லோகநாதன்,மதுரை மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், காவல் கண்காணிப்பாளர் அரவிந்த்,மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.





தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் நடைபெற்ற அரசு விழாவில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் 20252026ன் கீழ் , அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் பணிகளைத் தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, விருதுநகர் மாவட்டம் , ம.ரெட்டியபட்டி , அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை / பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் , விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் 2025 2026ன் கீழ், மாவட்ட வருவாய் அலுவலர் ரா.ஆனந்தி தலைமையில் 11 ஆம் வகுப்பு பயிலும் 144 பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார் . உடன் ஒன்றிய செயலாளர்கள் பொன்னுத்தம்பி, சந்தானப்பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.